මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office } (94)-011-2484500, (94)-011-2484600, (94)-011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax } (94)-011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website } www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No } DMS/Cir/2020
ඔබේ අංකය / உமது இல / Your No }
දිනය / திகதி / Date } 2020.10.26

முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல: 02/2020

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டமுறை சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.

**அரச துறை நிறுவனங்களுக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் / வெற்றிடங்களை நிரப்புதல்**

அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை துரிதப்படுத்தும் போது வினைத்திறனுடன் மனித வளங்களை பயன்படுத்திக்கொள்வதனை நோக்காகக் கொண்டு, அரச துறையில் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது / வெற்றிடங்களை நிரப்பும் போது தற்போது காணப்படுகின்ற சுற்றறிக்கையின் வரையறைகளில் திருத்தங்களைச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரச துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் / வெற்றிடங்களை நிரப்பும் பொறுப்பு தொடர்புடைய நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு / மாகாண பிரதம செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது. இதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமானது என வலியுறுத்தப்படுகின்றது.

02. அனுமதிக்கப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது / வெற்றிடங்களை நிரப்பும் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய விதம்

(i) ஏதேனும் நிறுவனமொன்றின் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் அது தொடர்பான சேவைப் பிரமான குறிப்புகள் / ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகள் ஏற்புடைய விதத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் / முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் / மாகாண ஆளுநரினால்

MSD

அனுமதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த அனுமதிக்கப்பட்டுள்ள பதவி எண்ணிக்கையில் வெற்றிடம் காணப்படுமாயின், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீண்டும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

(ii) ஆட்சேர்ப்புசெய்தல் / வெற்றிடங்களை நிரப்புதல் யாவற்றையும் அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு / ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

(iii) திறைசேரியின் நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்காக/ வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவையான நிதி ஏற்பாடுகளை அந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒதுக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) சுயமான நிதியிடலின் அடிப்படையில் தொழிற்படுகின்ற அரச நிறுவனங்களின் பதவி அணிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது/ வெற்றிடங்களை நிரப்பும் போது தேவையான நிதி ஏற்பாடுகளை தொடர்புடைய நிறுவனங்களின் வருடாந்த வரவுசெலவு அறிக்கையின் மூலம் ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உரிய பதவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளத்தின்/ சம்பளம் வகுதிகளின் கீழ் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்தல் / வெற்றிடங்களை நிரப்புதல் என்பவற்றை மேற்கொள்ளவேண்டிய அதேவேளையில், ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பதவியணிகளின் சம்பளங்களையும் கொடுப்பனவுகளையும் தீர்மானித்தல் கூடாது.

(vi) அனுமதிக்கப்பட்ட பதவியணியின் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது தொடர்புடைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக முறையான விதத்தில் பதிலாள் திட்டமொன்றை ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். அந்தத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் தொடர்புடைய ஊழியர்கள் ஓய்வுபெற்றுச் செல்வதற்கு மூன்று (03) மாதங்களுக்கு முன்னர் நிறுவனத்தின் தேவைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

(vii) நிறுவனங்களில் தற்கால சேவைகளின் தேவைகளுக்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட பதவியணிக்காக திருத்தங்கள் தேவைப்படும்பட்சத்தில் உரிய நிறுவனத்தினால் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மிகவும் வினைத்திறன்மிக்கதும் உற்பத்தித்திறன் மிக்கதுமான சேவையொன்றை வழங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பதவிகளை அடையாளங்கண்டு முறையான நியாயப்படுத்தலுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

MSD

(viii) ஆரம்பநிலை சேவை வகுதியிலுள்ள (PL) பதவிகளுக்காக தேவையான பணியாளர்களை பல்பணி அபிவிருத்தி செயலாற்றுகை செயலணி திணைக்களத்தின் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக ஆரம்ப நிலை சேவை வகுதியிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதனை தற்காலிகமாக இடைநிறுத்துவது சம்பந்தமாக "சகல ஆட்சேர்ப்புகளையும் தற்காலிகமாக இடைநிறுத்துதல்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2020.02.21 எனும் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்கத்தைக் கொண்ட முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ix) மேலே viii இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்பநிலை சேவை வகுதியின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் பிரகாரம் உள்ளக பதவி உயர்வின் மூலம் தொடர்புடைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பின், அதற்கு அமைவாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அதேவேளையில், ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும், பல்பணி அபிவிருத்திச் செயலாற்றுகை செயலணி திணைக்களத்தின் மூலம் தொடர்புடைய சேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(x) பொதுமக்களுக்கு துரிதமான மற்றும் நெருக்கமான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு முடியுமான வரையில் பிரதேச மட்டத்திலும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற இடங்களுக்கும் சேவையை வழங்குவதையும் மேற்பார்வை செய்வதையும் இலகுபடுத்தும் விதமாக உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்திலிருந்து அடிமட்டத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. சகல ஆட்சேர்ப்புகளையும் / வெற்றிடங்களை நிரப்புவதையும் மேற்கொண்டதன் பின்னர் அது தொடர்பான விபரங்களை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கும் தேசிய வரவுசெலவு திட்டத் திணைக்களத்திற்கும், மாகாணசபை சம்பந்தமானதாக இருந்தால், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கும் நிதி ஆணைக்குழுவுக்கும் துரிதமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்த சுற்றறிக்கையிலுள்ள ஆலோசனைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்பு / வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் சம்பளங்களையும் கொடுப்பனவுகளையும் வழங்குதல் தொடர்பில் தொடர்புடைய நியமன அதிகாரி / நிறுவனத் தலைவர் தனிப்பட்ட வகையில் பொறுப்புக் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளார் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

05. "அரசுத் துறையிலுள்ள நிறுவனங்களுக்கு பதவியணிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் சம்பளங்களையும் கொடுப்பனவுகளைம் வழங்குதல் சம்பந்தமாக" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 2018.07.18 ஆம் திகதியிடப்பட்ட 03/2018 எனும் இலக்கத்தைக் கொண்ட

MSD

முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மற்றும் திறைசேரியின் செயலாளரின் DMS/Policy/Recruitments எனும் இலக்கத்தையும் 2019.11.20 ஆம் திகதியையும் கொண்ட கடிதம் இதன் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

06. இந்த சுற்றறிக்கை பற்றிய மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின் 011-2484640 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களை தொடர்புகொள்ள முடியும்.

ஒப்பம்/ எஸ். ஆர். ஆட்டிகல
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி:-
1. சனாதிபதியின் செயலாளர்.
2. பிரதமரின் செயலாளர்.
3. அமைச்சரவையின் செயலாளர்.
4. செயலாளர், அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. கணக்காய்வாளர் அதிபதி.
6. செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு.
7. செயலாளர், தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு
8. செயலாளர், நிதி ஆணைக்குழு.

MSD